Adoniram J. Gordon, 1836-1895

Gordon
11.11.11.11



பாமாலை 515 என் இயேசுவே ! உம்மையே

1 என் இயேசுவே ! உம்மையே நான் நேசிக்கிறேன்;

வேறெந்த வீண் வாழ்வையும் நாடாதிருப்பேன்;

உம்மாலே மா நன்மையை நான் கண்டடைந்தேன்;

என் நாதா ! மென் மேலும் உம்மை நேசிக்கிறேன்.

2 இப்பாவியின் பேரில் முந்தி நேசம் வைத்தீர்;

நீர் ஜீவனை தியாகம் செய்து மீட்டுக் கொண்டீர்;

முட் கிரீடம் ஐங்காயமும் தியானிக்கிறேன்;

என் நாதா! மென்மேலும் உம்மை நேசிக்கிறேன்.

3 பேரன்பின் சொரூபி ! உம்மைப் போற்றுகிறேன்;

எப்போதும் உம்மோடு தங்க வாஞ்சிக்கிறேன்;

என் ஜீவனே போயினும் நான் நீங்க மாட்டேன்;

என் நாதா ! மென் மேலும் உம்மை நேசிக்கிறேன்.

4 பேரின்ப மேலோகத்தில் ஆனந்தங் கொள்வேன்;

நீடுழி ! உம் முகம் கண்டு ஸ்தோத்திரிப்பேன்;

எப்பாவ மில்லாமலும் நான் வாழ்த்தல் செய்வேன்;

என் நாதா ! மென்மேலும் உம்மை நேசிக்கிறேன்.